# சிலந்தி வலையில் கார்கன்!



வ ர்னையாகிறது!



# சார்லிக்கொரு சவால்!





ரூ. 2/-

புத்தம் புதிய கதை!

# சிலந்தி வலையில் காரிகன்!

## ஜெனிவர்



F.B.I. உளவுத் துறையில் காரிகனுடன் பணியாற்றிய சக ஏஜெண்ட். பாயும் பெண் புலி இவள். ஒரு புரபஸரை மீட்டு வருவதற்காக போலந்துக்கு அனுப்பப்பட்டபோது எதிரிகளிடம் சிக்கி விட்டாள்!

## பிலிப் காரிகன்



அமெரிக்க உளவுத் துறையின் இரகசிய ஏஜெண்ட். மின்னலுக்கு ஈடான மதியூகம்; வேங்கையின் வேகம்; அசாத்திய மனோதிடம் கொண்ட இவரின் சாகஸங்கள் மெய்சிலிர்க்கச் செய்பவை.

லயன் காமிக்ஸ்

## க்ரோன்ஸ்கி



பலமுறை காரிகனிடம் தோல்வியைச் சந்தித்த போலந்து நாட்டு உளவு அதிகாரி! காரிகனை பழி வாங்குவதே இவரின் வாழ்க்கை இலட்சியம்!

## கர்னல் ராஸ்கோவ்



காரிகனின் பழைய எதிரி இவன். எனினும் காரிகனின் திறமை மீது அதீத மதிப்பு உண்டு!


டெக்ஸாஸில் காரிகன் நினாவோடு விடு-முறையை உல்லாசமாக அனுபவித்துக் கொண்டிருந்த வேளையில் போலந்தில் அவருக்கு எதிராக சதி ஒன்று உருவாகிக் கொண்டிருந்தது.
நம் சூழ்ச்சி வலையில் சிக்கிக்கொண்ட அந்தப் பெண் ஜெனிவர்தான் காரிகனை இங்கே ஈர்க்கப் போகும் தூண்டில் புழு!
அவருடைய செயல் வரம்பு அமெரிக்காவோடு சரி என்று கேள்வி!
இருக்கலாம். ஆனால் இங்கே வரவழைக்க என்னால் முடியும்!
இதையெல்லாம் அனுபவிக்க பாஸ் விடுமுறை அளித்து அனுப்பியது குறித்து சந்தோஷம்தானே?
சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பார்கள்!
அடுத்து ஏதோ ஒரு முக்கிய பணியில் ஈடுபடுத்த உங்களை தயார்ப்படுத்துவது அவருடைய நோக்கம் என்பதுதானே உங்கள் சந்தேகம்?
ஜெனிவரை நம் ஆட்கள் வார்ஸா விமான நிலையத்தில் கைது செய்தனர்!
சேதி அவருக்கு எப்படி போய் எட்டும்?
அமெரிக்காவில் இது ஒரு பிரச்சனையே அல்ல.


காரிகனின் பாஸ் பலமுறை போன் பண்ணிவிட்டார். ஆனல் உன்னேடு தான் பேச வேண்டுமாம்!
சரியாகப்படவில்லேயே!
நிஜு ஜெனிவரைப் பிடித்து விட்டார்கள். எங்கு பார்த்தாலும் இது பற்றிய செய்திதான்! நாங்கள் ஒரு திட்டம் வகுக்கும் வரை காரிகனே தனிமைப்படுத்தி வையேன்!
ஜெனிபர் பாவம்- நான் முயற்சிக்கிறேன் சார்!
ஓ- ஸாரி- காரியம் கை மிஞ்சிப் போய் விட்டது'
வேலே வந்துவிட்டது நிஜு- இதைப் பார்!
அமெரிக்கப் பெண் கைது
கர்னல்- ராஸ்கோ
தூதரக வழி முறைகள் உள்ளன- அவ்வழியில் முயன்று பார்க்கட்டும்!
கர்னல் ராஸ்கோவ்! பயலுக்கு விலங்கு என்ருெரு பட்டப் பெயர் உண்டு!
தனியாகவா சொல்லப் போகிறீர்கள்?
ஆமாம்!
அங்கே உதவ உங்களுக்கு யாரும் கிடையாது- கிராதகர்கள் உங்களே கொன்று விடுவார்கள்!


பாஸ் சொன்னார்- நீங்கள்-
முதலில் அவரை சந்தித்துப் பேசிய பின்னரே எதையும் செய்ய வேண்டுமாம்!
திடீரென்று நாங்கள் ஊர் திரும்பவேண்டிய நெருக்கடி-
சந்தர்ப்பம் வாய்க்கும்போது மறுபடியும் இங்கேவர மறந்து விடாதீர்கள் மேடம்!
வாஷிங்டனிலிருந்து செய்தி- கர்னல்! காரிகன் நகரத் தொடங்கிவிட்டார். அவருடைய ஒவ்வொரு செயலும் யூகித்தபடியே உள்ளது!
வெற்றிக்கு என் வாழ்த்துக்கள்- காரிகன்!
அவனுடைய ஒவ்வொரு அசைவையும் மரணத்தோடு கை குலுக்கும் வரை இப்போதே என்னால் பிட்டுப் பிட்டு வைக்க முடியும்!
அமெரிக்காவில் வாஷிங்டனை நோக்கி பயணமானார் காரிகன்,
அவள் எங்கே வைக்கப்பட்டு இருக்கிறாள் என்று தெரியாத நிலையில் என்ன சாதிக்க முடியும்?
அது ஒரு பிரச்னையாக படவில்லை எனக்கு!
உளவுத்துறை தலைமையகத்தில்-
தூதரகத்தின் பொறுப்பில் இதை விட்டு விடு!
ஸாரி- சீஃப்!


இவர் ப்ராஸ்ட்- ஜெனிவரை அங்கே போலந்துக்கு அனுப்பி வைத்த அதிகாரி!
மனித உரிமைக் குழு ஒன்று புரபஸர் க்ருட்டனை விடுவிக்க விரும்பியது!
விஞ்ஞானத்திற்காக நோபல் பரிசு வாங்கிய மேதை அவர்!
தூதரகத்தினர் நிதானமாக அதை சாதித்திருக்கலாமே?
அப்படியில்லை. அவருக்கு வயது 68. அத்தோடு நோய்வாய்ப்பட்டு இருந்தார்!
நான்சென்ஸ்! செத்துக் கொண்டு இருக்கும் ஒரு கிழவர் பொருட்டு ஒரு இளம் பெண்ணை பணயம் வைத்தது முட்டாள்தனம்!
புரியாமல் பேசுகிறீர்கள் காரிகன்!
உங்களுக்கெல்லாம் கொஞ்சமாவது மூளை-
பிலிப் போதும்! ப்ளீஸ்- நிறுத்துங்கள்!
மனித உரிமைக் குழுதான் அப்படி- யொரு திட்டம் வகுத்தது. நான் இடைத்தரகன்- அவ்வளவுதான்!
அவளுக்கு ஏது தகுதி?
இருந்தது! தாய் போலந்து நாட்டவள். அவளுக்கு போலிஷ்தான் தாய்மொழி. அந்நாட்டினுள் பரவலாக பலமுறை சுற்றுப் பயணம் செய்த அனுபவம் உண்டு. எனவேதான்-


நமக்கென்ன வந்தது. ஆபத்து வந்தால் அவளுக்குத்தானே என்ற அலட்சியம் இல்லையா?
இந்தக் கிண்டல் பேச்சு முறையற்றது காரிகன்!
அவளை எதிர்பார்த்து காத்திருந்தார்கள். போனவுடன் 'லபக்'கென்று அமுக்கி விட்டார்கள்- அப்படித்தானே?
ம்ம்-- உங்களுக்கு அதிகாரப்பூர்வமற்ற முறையில் எல்லா உதவிகளையும் செய்யத் தயாராக இருக்கிறோம்!
உதவியா? எனக்கா? எந்த வகையில்?
ஜெனிபர் ஓர் மாணவியாக அங்கே சென்றாள்!
ஒரு ஆராய்ச்சியாளனாக நான் அங்கே செல்ல ஏற்பாடு செய்யுங்கள்!
ஜெனிவரைக் கைது செய்தவன் கர்னல் ராஸ்கோவ். அவனைப் பற்றிய விபரங்கள் அடங்கிய பைல் இதோ!
ஈ.எஸ்.பி. ஆன்மீகம் இவற்றில் தீவிர நம்பிக்கை கொண்டவன்!
அந்த நபர்-
காரிகன் பற்றி வந்த புதிய தகவல் இதோ!
அனுமானமாகச் சொல்லட்டுமா? நம் கிராமீயப்புறத்தை ஆராய வரும் ஆராய்ச்சியாளனாக வருகிறான்- சரிதானா?
கார்ட்டர் பிலிப்ஸ் என்ற மாற்றுப் பெயரில் வருகிறார்!
ஆடம்பர உடைகள், மூக்குக் கண்ணாடி துல்லியமாக படம் பிடிக்கும் கேமரா, ஃப்ரீப் கேஸ், நிறைய கத்தை கத்தையாக ஆராய்ச்சிக் குறிப்புகள்-


ராஸ்கோவின் யூகங்கள் முற்றிலும் சரியாகயிருந்தன.
காரிகன் எனக்கென்னவோ ஒரே பயமாக இருக்கிறது!
நீ தைரியசாலி என்றல்லவா நினைத்தேன்!
நான் அனுப்பும், அல்லது என்னைப் பற்றிய செய்திகளில் நான் சொன்ன சங்கேத அடையாளம் இருக்கிறதா என்று கவனிக்க மறந்து விடாதே.
நீங்கள் ரொம்ப ஜாக்கிரதையா நடந்து கொள்ள வேண்டும்!
சிலந்தி வலையை நோக்கிப் புறப்படும் காரிகனோடு அந்த ஏரோ-பிளேட் விமானம் கிளம்பியது.
நாங்கள் சந்தித்துக் கொண்டதில்லை யூரி! ஆனால் அவனை எனக்குத் தெரியும்!
உங்களுக்கு ஏற்கனவே காரிகனை தெரியுமா கர்னல் ஸார்!
ஆராய்ச்சிக் கட்டுரையாளனாக என்னை உருவகப்படுத்தி ப்ராஸ்ட் தயாரித்த அடையாள பேப்பர்களை ஒரு நோட்டம் விடலாம்!


சரியாகத்தான் இருக்கிறது. ஆனல் அந்தப் பயல் ராஸ்கோ நம்ப மாட்டான். ஜெனிவருக்கான போலி பாஸ்போர்ட் சுத்த அபத்தம்!
நானும் ஜெனிவரும் திரும்பி பயணத்தை மேற்கொள்ளும் போது அது ஊர் திரும்பும் சந்தோஷப் பயணமாக இராது என்று தோன்றுகிறது!
அதே சமயம் தரையிலோ-
மிஸ் நினு- ஏன் சோர்ந்து விட்டாய். காரிகன் போய் விட்டாரே என்று?
சேச்சே- அப்படி எல்லாம் இல்லை!
போனால் போகட்டுமே- எனக்கென்ன வந்தது?
வா யூரி- வார்ஸாவில் வந்து இறங்கும் நம் 'நண்பரை' வரவேற்கச் செல்வோம்!
ஜெனிவருக்கு நம் சூழ்ச்சி தெரியாது. சுலபமாக வலையில் மாட்டிக் கொண்டாள். ஆனல் காரிகன் விஷயம் அப்படியில்லை. பயல் சமயோசிதம் தெரிந்த தந்திரக்காரன்- ஜாக்கிரதை! கோட்டை விட்டீர்களோ- மன்னிக்கவே மாட்டேன்!


ஓ ஸாரி- தெரியாமல் இடித்து விட்டேன்!
பரவாயில்லை!
ஒரு ஒட்டுக் கேட்கும் கருவி!
மிக்க நன்றி!
நன்றியா? உங்களுடைய ஃப்ரீப் கேஸை விழச் செய்ததற்கா?
ஆமாம்! நான் கொண்டு வராத பொருள் ஒன்று இங்கிருப்பதைக் கண்டு கொண்டேனே!
விமான நிலையத்தின் அனைத்து வாயில்களையும் கண்காணிக்-கவும். காரிகன் தப்பியோட முனைந்தால் ரேடியோ டிரான்ஸ் மிட்டரின் சமிக்ஞையை பின் தொடரவும்!
ஓ.கே.
காரிகன் மீது உனக்கு பிடிப்பு இல்லாத பட்சத்தில் நீ இன்று இரவு என்னோடு விருந்து உண்ண வரலாமே!
ஓ-வருகிறேனே!
புதிதாக ஏதோ ஒன்று உங்கள் ஃப்ரீப் கேஸில் இருக்கிறதா- இங்கே கடத்-தல் விவகாரம் என்றால் கம்பி எண்ணவேண்டி வரும்- ஜாக்கிரதை!
ஊஹூம்- அப்படி ஏதுமில்லை! சிறு அலங்காரப் பொருள் ஒன்று- இதோ!


குட் ஆப்டர் நூன்! வார்ஸாவில் இப்பொழுது தரையிறங்கப் போகிறோம்!
குட் பை ஸார்!
குட் பை!
எதிரிகளின் முசத்தில் கரியைப்பூச இது உங்கள் பையில் இருக்கட்டும்!
கர்னல் ராஸ்கோ! என் சக பயணியிடமிருந்து வரும் டிரான்ஸ்மிட்டர் சமிக்ஞை அலை எட்டுகிறது!
அதோ போகிறான்!
எல்லாமே ரொம்ப சுலபமாகி விட்ட மாதிரி இருக்கிறது கர்னல்!
மாதிரி என்ற வார்த்தையை எடுத்து விடு யூரி!
அந்த ஆளுக்குப் பின்னால் போகிறார்கள்!
நான் வேறொரு தந்திரம் பண்ணுகிறேன்!


எல்லோரும் போய் விட்டார்கள். நீங்களும் இறங்குங்கள் ஸார்!
ஓ-ஷ்யூர்!
அந்த ஆளின் பின்னே அவர்கள் போய்க் கொண்டிருக்கையில் நான் தலைமறைவாகிவிட வேண்டும்!
நல்வரவு மிஸ்டர் காரிகன்!
காரிகனா?
சட்டென்று தான் ஏமாந்து போனதைப் புரிந்து கொண்டான் ராஸ்கோவ்.
துரோகி! காரிகன் தப்பிச் செல்ல உதவிய இந்த ராஸ்கலை கைது செய்யுங்கள். நாலா திசைகளிலும் காரிகனை தேடுங்கள்!
இந்த மாறுவேடம் இனியும் அவசியமில்லை!
ஒரே ஒட்டமாக ஒடிப் போய் விட வேண்டும்!


அனைத்து சாலைகளையும் மூடுங்கள். எல்லோருடைய பாஸ்போர்ட்டை-யும் பரிசீலியுங்கள். காரிகன் தப்பிச் சென்று விட்டால் பல தலைகள் உருளும்!
காம்ரேட்- க்யூவில்தான் வரணும்!
ஸ்பெஷல் போலீஸ் படை அதிகாரி நான்!
ஸாரி ஸார்- ஏறி அமருங்கள்!
அருகேயுள்ள போலீஸ் நிலையத்திற்கு விடு!
அந்த அமெரிக்கன் எங்கள் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு மறைந்தோடி விட்டான்.
கையாலாகாத முட்டாள்! காரை கொண்டு வா- ரேடியோ மூலம் அவனை கண்டுபிடிப்போம்!
காரைக் கொஞ்சம் நிறுத்து!
போலீஸ் நிலையம் இன்னும்-
ம்ம்- வெளியேறு!
ப்ளீஸ்- சுட்டு விடாதீங்க!


நிச்சயம் போலீஸில் புகார் செய்வான். என்னை உயிரோடு பிடிக்க உத்தரவு பிறக்கும்!
பிடிபட்டு ஜெனிவரின் அருகே சிறை வைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு கண்ணாமூச்சி ஆட்டம் ஆடினார் காரிகன்.
ராஸ்கோ ஆங்காரத்தோடு குதிக்கக்கூடும். கோபப்படுபவர்கள் தெளிவாக சிந்திக்க முடியாது!
வடக்கே ஸ்விஸ்கி தெருவில் போய்க் கொண்டிருக்கிறான். உயிரோடு பிடிக்க வேண்டும்!
சுலபத்தில் அகப்பட்டுக் கொண்டு விடலாகாது. சந்தேகம் வந்து விடும்!
கார் விரையும் போதே வெளியேறிக்கொண்டு விடுகிறேன்!


மடையன்- வீணாக உயிரைப் போக்கிக் கொண்டுவிட்டான்!
நோ- கார் காலியாக உள்ளது!
அதோ ஓடுகிறான்!
விடாதே-பிடி! அவனை கோட்டை விட்டால் கர்னல் நம் தோலை உரித்து விடுவார்!
கர்னலுக்கு தகவல் கொடு-காரிகன் ஜாக்லேடி பார்க் வளாகத்தினுள் மாட்டிக் கொண்டிருப்பதாக!
கர்னல் ராஸ்கோ காரிகனின் கார் எரிந்து கொண்டிருந்த இடத்தை நெருங்கினான்.
காரிகனை கொன்று விட்டார்களா மடையர்கள்?
கார் காலியாக இருந்தது கர்னல்!
அப்படியானால் பயல் நம்மிடம் வகையாக சிக்கிக் கொண்டு விட்டான். ஓரிடம் பாக்கியில்லாமல் தேடுங்கள்!


அதோ வருகிறார்கள்!
வாஷிங்டனில் நினாவும், ப்ராஸ்டும்-
இரண்டு பக்கங்-களிலிருந்தும்!
காரிகன் ஜெனிவரை அவ்வளவு சுலபத்தில் மீட்டு வந்து விட முடியுமா என்ன?
அதிலென்ன சந்தேகம்?
அவரால் அதை தனியாக சாதிக்க முடியாது. அங்கே எங்களுக்கு வேண்டப்பட்டவர்கள் இருக்கிறார்-கள். காரிகனுக்கு ஒத்தாசை செய்-வார்கள். நீ அவருடைய திட்டத்தை விவரித்தால்!
என்னிடம் கூட அவர் சொல்லவில்லை!
மேலே போய் விடலாம்!
காரிகன் இங்குதான் எங்கோ இருக்கணும் யூரி!



நான் பிடிபட்டதும் என்னையும் ஜெனிவர் இருக்கும் சிறையிலேயே அடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்!
சுலபத்தில் நான் அகப்பட்டுக் கொள்ளலாகாது. அந்த விஷ நாகம் ராஸ்கோவுக்குச் சந்தேகம் வந்து விடும்!
அவனுக்கு இங்கு யாரேனும் அடைக்கலம் தந்திருப்பதாக தெரிந்தால் தொலைத்து விடுவேன் அவர்களை!
ஒரு வீடு பாக்கியில்லாமல் தேடுங்கள்- போங்கள்!
கொஞ்சம் மேலே பாருங்கள்!
பின்னால் விளக்கு எரிந்தது.
ம்ம்- இதோ இவன் கத்தப் போகிறான்!
யார் நீ?
அதோ இருக்கிறான்!
சுட்டு விடாதீர்கள்!


காரிகன்- உன் வசமுள்ள ஆயுதங்-களை எறிந்து விட்டு இறங்கி வா கீழே- இல்லையேல் முதலில் அந்தப் பெண்ணைச் சுடுவோம்!
எங்களுடைய தூதரகத்திற்கு விஷயம் தெரிந்தால் நீ சிக்-கலில் மாட்டிக் கொள்வாய்
தெரிந்தால் தானே?
இறங்கி வருகிறான்- கர்னல்!
வேறு வழி?
என்னை துப்பாக்கி முனையில் நிறுத்த காரணம்?
காரணமா? சொல்கிறேன்!
துப்பாக்கி முனையால் இப்படி உன் தாடையில் ஓர் அடி கொடுக்கத்தான்!
ஆ!ஆ!
ணங்!


ஹெலிகாப்டரில் தூக்கிப் போடுங்கள்!
கர்னல்- அங்கே நீங்கள் பேசிய தூய ஆங்கிலம்?
நான் அமெரிக்காவில் வளர்ந்தவன் யூரி!
ஜோக் அடிக்கிறீர்களா ஸார்?
இல்லை! என் தந்தை அமெரிக்காவில் தூதரக அதிகாரியாகப் பணியாற்றினார். நான் அங்கே தான் கல்வி பயின்றேன்!
பின்னர் இங்கு வந்து இராணுவத்தில் சேர்ந்தேன்!
இவன் பெரிய கில்லாடியாமே?
இருக்கட்டுமே- கானலின் முன் எம்மாத்திரம்?
கர்னலின் மிருகத்தனமான தாக்குதலில் உணர்விழந்த காரிகன் மெள்ள விழித்தெழலானார்.
ஊஹூம்- சுயவுணர்வு வந்ததாக காட்டிக் கொள்ளக் கூடாது. இந்த வாயாடிகள் ஏதாவது உளறக் கூடும்!


நாம் முன்பு பிடித்த பெண்ணோடு சம்பந்தப்பட்டவனா?
இவனை வரவழைக்கத்தான் அவள் பிடித்து வைக்கப்பட்டிருப்பதாக கேள்வி?
இவன் மீது ஏன் இப்படி-யொரு அக்கறை?
நம் முக்கிய திட்டங்கள் சிலவற்றை நாசப்படுத்தி விட்டானும். யூரி சொன்னார்!
இவனை யாருக்கோ பிடிக்கவில்லை!
கர்னல் ராஸ்கோவுக்குத்தான்! ஆனால் இவன் சாகவில்லையா?
இல்லை! மயக்கம்-அவ்வளவுதான்!
அந்தப் பெண்ணை அடைத்து வைத்திருக்கும் இடத்திற்கு இவனை கொண்டு போங்கள்!
ஜாக்பாட்!
இரகசிய சிறைச்சாலையை நோக்கி வேன் விரைந்தது.
மயங்கிக் கிடப்பதாக நாடகமாடிய காரிகன் வழி முழுக்க தன் புலன்களை கூர்மையாக்கி வரைபடம் உருவகப்படுத்திக் கொண்டே சென்றார்.
டிங்!.டாங்!
சத்தங்கள்!
வாகனங்கள்
விர்ர்ர்....
சர்ர்ர்..


பயணத்தின் முடிவில்-
அம்மாடி- என்ன கணம்!
அறையினுள் தூக்கி எறிந்து விட்டுத் திரும்பி விடலாம்!
கர்னல் வந்து மிச்சத்தைக் கவனித்துக் கொள்வார்!
ஜெர்! ஜெர்!
தடியன்கள் போய் விட்டனர்!
இனி வேலையை ஆரம்பிக்கலாம்!
ஜெனிவர்! ஜெனிவர்! நான்தான் காரிகன்! கேட்கிறதா?
ஆனால்-மறுபகுதியில்-
நோ நோ-இது இன்னுமொரு சூழ்ச்சி? நான் பதில் குரல் கொடுக்கப் போவதில்லை!


ஜெனிவர்! நான் கூப்பிடுவது கேட்கவில்லையா!
அந்த மடையன் என்ன சொல்லி கூச்சலிடுகிறான்?
வா- போய் பார்ப்போம்!
தாகம்- தத் தத் தண்ணீர்-ப்ளீஸ்!
கர்னல் சொன்னால்தான்!
பின்னர்-
இவனை நன்றாக சோதனை போட்டீர்களா?
அவ்வாறு எங்களுக்குச் சொல்லப்படவில்லையே?
அதைக்கூட சொல்ல வேண்டுமா- இடியட்! அவன் தற்கொலை செய்து கொண்டால் நீயும் பரலோகம் போய் விடுவாய்!
இந்த அறையை உடனே திற!


ஓகோ- உயிர்க் கொல்லி மாத்திரையை விழுங்க தைரியமில்லையாக்கும்?
கைவசம் இருந்தால் முதலில் உன் வாயில் திணிப்பேன்!
வாய்க் கொழுப்பு! இவனுடைய ஆன்டைகளை களையுங்கள் - முழுமையாக.
உன்னால் அவமானப்பட்ட கர்னல் க்ரோன்ஸ்கிடைய பார்வையாளராக வரவழைத்திருக்கிறேன் - உன் மாதிரி அகம்பாவக்காரர்களை நான் எப்படி கையாளுகிறேன் என்று காண்பிக்க!
என்னை ஏன் இப்படி வதைக்கிறீர்கள்- கர்னல்? எனக்கு உருப்படியாக எந்த ஒரு இரகசியமும் தெரியாது!
பழிவாங்க என்று வைத்துக் கொள்ளேன்!
எங்களுடைய அதி முக்கிய திட்டங்களை நீ நாசப்படுத்தியிருக்கிறாய்-
சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்படுவாய் நீ- அந்த பெண் ஜெனிவரை போல்!
என்ன- ஜெனிவர் செத்துவிட்டாளா?


ஹூம்- பூஞ்சையான உடல்- உயிர் சீக்கிரமே போய்விட்டது. நீ கூடுதலாக தாக்குப் பிடிப்பாய் என்று நம்புகிறேன்!
புளுகுகிறான். ஆனால் உண்மை தெரியும் என்பதாகக் காட்டிக் கொள்ளக் கூடாது!
அப்பாவிப் பெண்ணை அநியாயமாகக் கொன்ற உன்னை-
என்ன சப்தம்? இன்னொரு அப்பாவியை வதைக்கிறார்களோ?
கர்னலை கொல்ல முயற்சிப்பதாக நாடகமாடிய காரிகனை காவலாளிகள் மடக்கினார்கள்.
ணாங்! ணாங்!
கரோன்ஸ்கி வந்து சேர்ந்தபின், இதற்கும் சேர்த்து உன்னைக் கவனிக்கிறேன் காரிகன்!


கிராதகர்கள்-உடம்பெல்லாம் என்னமாய் வலிக்கிறது!
பின்னர்-
இந்தா- உணவு!
அமெரிக்க பெண்ணை கொன்றது யார்-சொல்-லுங்கள் நண்பர்களே!
மூச்!
கர்னல் க்ரோன்ஸ்கி வந்து விட்டாரா?
ம்ம்- தமாஷ் விரைவிலேயே தொடங்கப் போகிறது!
சுவரின் மறுபுறம்-
அந்தக் குரல்- பிலிப் என்று கத்திய அதே குரல்! யாரது பிலிப்? அப்படி யாரையாவது நான் அறிவேனா?
எழுந்து நில் காரிகன்! உன்னைக் காண உன் பழைய 'நண்பரை' அழைத்து வந்திருக்கிறேன்!
என்னப்பா காரிகன்- இங்கே என்ன பண்ணிக் கொண்டு- இருக்கிறாய்- நலம்தானே?
இன்னமும் அகம்பாவம் அழியவில்லை உன்னிடம்!


திமிர் பிடித்தவனே- கேலிச் சிரிப்பா சிரிக்கிறாய். உன்னை-
இவனை என்ன செய்வதாக உத்தேசம்?
எங்களுடைய திட்டங்களை நாசப்படுத்திய குற்றத்திற்காக சித்ரவதைப்பட்டு சாகப் போகிறான்!
சரியான தமாஷ- மாகப்படவில்லை!
வேடிக்கை பார்த்து ரசிப்பதோடு நிறுத்திக்கொள் க்ரோன்ஸ்கி!
சரி- உன்னிஷ்டம்! ஆசாமி பலே கில்- லாடி- ஜாக்கிரதை யாக நடந்துகொள்!
ப்பூ' தனியனாக- அடிபட்டு- ஆயுதம் ஏதுமின்றி- என் ஆட்கள் சுற்றி நிற்க- இவன் என்ன செய்துவிட முடியும்?
இவனை நன்றாக சோதனைபோட்டு விட்டீர்களா?
இல்லை- அவசி யப்படவில்லை!
ஏய்- என்ன பண்ணுகிறாய்?
இரகசிய ஆயுதம் ஏதாவது இருக்- கிறதா இவனிடம் என்று சோதனை போடுகிறேன் காம்ரேட்!
ஆங்!
கத்தி!


அடேய் சோமாறிகளே– இதைப் பார்த்தீர்களா உதவாக்கரை நாய்கள்!
எ-என்ன அது?
ராஸ்கோவ் இதற்கு உனக்கு நன்றி சொல்லக்கூட மாட்-டான க்ரோன்ஸ்கி! ஆனல் என்றாவது ஒருநாள் உன்னை தண்டிக்காமல் நான விட மாட்டேன்!
அதற்கு உனக்கு ஒரு வாய்ப்பு கிட்டாது காரிகன்! பயலைக் கொண்டு வாருங்கள் 'சர்ஜரி' மேஜைக்கு!
பக்கத்திலிருந்து வேடிக்கை பார்க்கத் தானே என்னை வரவழைத்தாய். நீண்ட பயணம் அலுப்பாக இருக்-கிறது- வயதாகி விட்டது பார்!
நாளைக்கு வைத்துக் கொள்ளலாமே!.
ஆல்ரைட்! ஒருநாள் பொறுத்து இருப்பதால் ஒன்றும் குடி முழுகி விடாது!
அந்த கத்தியை நான் எடுத்து வர வில்லை. க்ரோன்ஸ்கியின் நோக்-கம்தான் என்ன? ஓ-


அந்தக் கிழவன் இரண்டு கத்தி கொண்டு வந்திருக்கிறான்!
ராஸ்கோவை நாளை வரை தாமதிக்கச் செய்து இதைக் கொண்டு நான் செயல்பட அவகாசமும் கொடுத்திருக்கிறான்!
ராஸ்கோவுக்கும் அவனுக்கும் உட்பகையோ?
அப்படித்தான் இருக்கணும்!
இதைக் கொண்டு என்ன செய்யலாம்?
ஆங்- இப்படியொரு தந்திரம் பண்ணிப் பார்க்கலாம்!
கத்தியால்-
உடல் முழுக்க கீறிவிட்டு-
இரத்தம் சொட்டச் சொட்ட-
மரண ஓலமிட்டால்-
ஆ! ஆ!
?
ஹே- இரத்தம்-
ஐயோ!


அவன் செத்துப் போனால்-
ராஸ்கோவ் என்னைக் கொன்று விடுவார்!
கலவரமடைந்த காவலாளி கதவைத் திறந்தான்-உள்ளே வர!
வருகிறான்- என் யுக்தி பலித்து விட்டது!
வா- அருகில் நெருங்கி வா!
ம்- இன்னும் பக்கமாக!
அந்த சிப்பாயின் சகா கதவு திறந்து கிடப்பதை கண்டு மிரண்டு போனான்.
என்ன- அமெரிக்கனை அடைத்து வைத்திருக்கும் சிறையினுள் தனியாக நுழைந்து விட்டானா-
ஏன் இந்த முட்டாள்தனம்!



உள்ளேயிருந்து ஒரு கரகரப்பான குரல்-
காம்ரேட்! தற்கொலை செய்து கொள்ள முயற்சிக்கிறான்-
வா-நெருங்கி வா-கிட்டே-
இவன் செத்துப் போனால்-
நாமும சேர்ந்து மடிந்து போவது நிச்சயம்! ஏய்ய் நீ-
ஆவ்-ஐயோ!
காவலர்கள் இருவரையும் நையப் புடைத்து விட்டு அவர்களில் ஒருவனின் உடுப்பை அணிந்து கொண்டார் காரிகன்.
ஓ! யாரையோ தீர்த்துக் கட்டி விட்டார்கள். அ-அடுத்து நா-நான்தான்!
நான் எல்லா அறைகளையும் சோதனை போடும் வரை நீ இங்கேயே காவல் நில்!
ஜெனிவர் எந்த அறையினுள் இருக்கிறாளோ?
கிளிக்
கிளிக்
ஜெனிவர்?


உஷ்ஷ்-
ஜெனிவர்!
நான்-
என்னைத் தெரிய வில்லையா?
போ-போய்விடு- என்னை இனியும் இம்சிக்காதே!
கடுமையான சித்ரவதைக்கு ஆளாகி-யிருந்த ஜெனிவர் தெளிவாக எதை-யும் சிந்திக்க இயலாத நிலையில் இருந்தாள்.
ஐயோ- நான்.
காரிகன்! நினைவில்லை?
எனக்கு எந்த காரிகனையும் தெரியாது!
ஓ அப்படியா- ஆல்ரைட்!
ஏய் பெண்ணே- எழுந்திரு. ராஸ்கோவின் உத்தரவு- வா- என்னோடு!
ம்ம்!
எல்லா சிறை கதவுகளையும் திறந்துவிட்டார் காரிகன்!
அடைபட்டுக் கிடப்பதும் ஓடிப் போவதும் இனி உன் இஷ்டம்!
ஜெனி- அஹ்-
பெண்ணே-
வா!


கர்னல் இந்தப் பெண்ணை அழைத்து வரச் சொன்னார்!
சே!
என்னிடம் அப்படி சொல்லவில்லையே!
நகராதே- இல்லையேல் சுடுவேன்!
டுமீல்!
ஓடி வா- ஜெனிவர்!
முடியவில்லை- ஆ!
ஜெனிவர்!
சே- வேகமாக ஓடிப் போக முடியாதே!
ஆங்- ஓடத் தேவையில்லை!


பூட்டிக்
கிடக்கிறதே!
ஏதாவது ஒரு சாவி
சேராமலா போயிடும்!
அப்பாடா!
உள்பக்கம் தாழ்ப்பாளில்லே!
யூரி- எதற்காக அபாயச்
சங்கு அலறுகிறது?
கர்னல்- யாரோ
தப்பியோடுகிறார்கள்!


என்ன- காரிகன் தப்பிலிட்டானா?
காரிகனுக்கு முதல் கட்ட வெற்றி! சிறையிலிருந்து ஜெனிவரை வெளியே கொணர்ந்து விட்டார்.
தேடுங்கள்- எல்லா மூலைமுடுக்குகளிலும்!
கதவை எவனாவது திறந்தால் அவன் எமலோகத்தைதான் பார்ப்பான்!
கர்னல் ராஸ்கோவ்- காரிகன் தப்பி விட்டாராமே!
உன்னுடைய விஷமம்தானா க்ரோன்ஸ்கி?
நானா? என்னை நீதான் அங்கே அழைத்துச் சென்றாய். நீ கண்டு பிடிக்கத் தவறிய ஊசியை நான கண்டெடுத்தேன். அவன் ஆபத் தான ஆசாமி என்று உன்னை நான்-
போதும்- போய்த் தொலை சனியனே?


"உனக்கு முட்டாள் பட்டம் கட்டிய காரிகனை எப்படி நான் கையாளுகிறேன் என்று வந்து பார் க்ரோன்ஸ்கி" என்று நீதான் எனக்கு அழைப்பு விடுத்தாய்!
ஆமாம்- இப்போது போய்த் தொலை என்கிறேன்!
நீ என்னை சந்தேகிக்கிறாய்?
வேண்டாம் அந்தப் பேச்சு- இடத்தை காலி செய்!
உன் விருந்தோம்பல் முறை என்னை நெகிழச் செய்கிறது!
இந்த கிண்டல் எல்லாம் எனக்குப்பிடிக்காது- கெட் அவுட்!
கர்னல் கோபமாக இருக்கிறார். நான்-
உஷ்ஷ்- பேசாதே!
ஏ-ஏன் அடித்துக் கொள்கிறார்கள்?
ராஸ்கோ தன் அதிகாரத்தைக் காட்டுகிறான்! நரிக்குணம் படைத்த க்ரோன்ஸ்கி அவனுக்கு சினமூட்டுகிறான்- ஏன்?
இனி ஒரு கணம்கூட நீ இங்கே நிற்கக்கூடாது-
பாஸ் கொடுத்தனுப்புகிறேன்-ஓடிப் போய்விடு!


அந்தக் கார்தானா?
ஆமாம் ஸார். இந்தாருங்கள் பாஸ்!
என் பையை தூக்கி வா. வேறு யாரையும் காணோமே? எல்லோ-ரும் காரிகனைத் தேடி போய் விட்டார்களா?
ஆமாம் ஸார்!
வேண்டுமென்றே சத்தமாகப் பேசினான் க்ரோன்ஸ்கி.
க்ரோன்ஸ்கி- உங்களுடைய உரத்த குரல் பேச்சின் அர்த்தத்தை நான் புரிந்து கொண்டு விட்டேன். நன்றி! வா ஜெனிவர்!
எங்கே.
க்ரோன்ஸ்கி நமக்கு ஒரு வாகனம் ஏற்பாடு செய்திருக்கிறார் என்று நினைக்கிறேன்!
ஆம்-அப்படித்தான்-ஏறு ஜெனிவர்! படுத்துக்கொள் கீழே!
நான் இந்தப் பக்கம் உட்கார்ந்து கொள்கி றேன்-நீ ஓட்டு!


நுழைவாயிலில்-
கர்னல் ராஸ்கோவ் தன் 'நண்பரை' வெளியேறுமாறு உத்தரவிட்டுள்-ளார். இதோ அவருடைய பாஸ்!
என் நண்பர் காரிகனையும், அந்தப் பெண்ணையும் கண்டுபிடித்து விட்டாரா?
அகப்பட்டால் மறுகணமே பரலோகம்தான்!
க்ரோன்ஸ்கியின் காரின் பின்புறம் பதுங்கிய நிலையில் தடையின்றி பயணம் தொடர்ந்தது.
ஓரிடத்தில்-
நிறுத்து!
ஓ: க்ரோன்ஸ்கி! நீங்களா? ஸாரி!
போ என்று சொல்லி விட்டார் உங்களுடைய கர்னல்- போய்க்கிட்டிருக்கேன்!
நீங்கள் போகலாம்!
விழிப்போடு இருங்கள். அந்தப் பயல் காரிகன் எமகாதகன். எப்படியாவது தப்பித்துக் கொண்டு விடுவான்!



காரிகன்- உன் எதிரியை இனி நீயாக சமாளித்துக் கொண்டு விடலாம் இல்லையா?
காம்ரேட்- கர்னல்?
ஓ-ஷ்யூர்!
இந்தாப்பா- காரை அந்த கிடங்கின் அருகே நிறுத்து!
ம்ம்-நடங்கள்!
ஆல்ரைட் க்ரோன்ஸ்கி- கட்டிப் போட்டுவிட்டு புறப்படட்டுமா?
போதாது- காயம், வீக்கம் இருக்க வேண்டும்
அவசியமா?
ஆமாம்- இல்லையேல் பயலுக்கு சந்தேகம் வரும்- என்னைக் கொன்று விடுவான்!
?
உன் தூதரகத்திற்கு நான் செய்தி அனுப்ப வேண்டுமானால் அடித்துப் போடுமுன் இங்கே இதில் எழுது!


இந்தா பாஸ்- இப்போது முதல் நீ க்ரோன்ஸ்கி. நாட்டை விட்டு ஓடி விடு!
இனி அடி என்னை!
மனதுக்கு கஷ்டமாக இருக்கிறது!
கவலைப்படாதே. பாஸ்கோ-கோவின்யா மண்டையோடு அது! துப்பாக்கி குழாய் வளையும்வரை விடாதே- அடி பலமா!
டங்! டங்!
ஓ.கே. ஜெனிவர்! வா-போகலாம்!
ஊர் திரும்புகிறோமா?
என்ன - பதிலைக் காணோம்!
நீ எதற்காக இங்கே வந்தாய்- நினைவிருக்கிறதா ஜெனிவர்?
ம்ம்- தேடிக் கண்டு பிடித்து உதவ!
ஆமாம்- புரபஸர் க்ருட்டனை தப்ப வைக்க! அவரை நீ எங்கே சந்-தித்தாய்- சொல் ஜெனிவர்!
716 - ரெட்ஸ் கயா ப்ளேஸ் அப்படித்தான் ஞாபகம்!
நேரே அங்கே போவோம்- ராஸ்கோவ் இதை எதிர்பார்க்கவே மாட்டான்!


தடையின்றி தொடர்ந்தது பயணம்.
சரியான முகவரி தானா?
தப்பாக இருந்தால் கோபித்துக் கொள்ளக் கூடாது!
அதே சமயம் உளவுப் படையினர்-
மேற்கு நோக்கிச் செல்லும் சாலைகளை எல்லாம் மூடச் சொல்லி உத்தரவிட்டு இருக்கிறேன் சார்!
முட்டாளே- அவன் இன்னமும் இங்கே தான் இருக்கிறான்! எந்த வாகனமும் காணாமல்-
'பட்'டென்று க்ரோன்ஸ்கியின் சதி புரிந்தது ராஸ்கோவிற்கு-
க்ரோன்ஸ்கி!
ஏறு காரில்- நகர்த்து சீக்கிரம்!
அந்தக் கிழவன் மட்டும் என் கையில் கிடைத்தால் நார் நாராகப் பிய்த்து எறிந்து விடுவேன்!
அதோ இருக்கிறது. காரை இப்படி மூலையில் மறைவாக நிறுத்துகிறேன்!
காரிகன் புர' 'ஸரின் வீட்டை அடைந்திருந்தார்.


716C
டக்! டக்!
யார்?
?
நீங்கள்தான் புரபஸர் க்ருட்டனா?
ஆமாம் - உங்களுக்கு என்ன வேண்டும்?
68 வயது- சாகக் கிடக்கிறார் என்றார்களே! இல்லை- ஏன்?
உங்களோடு கொஞ்சம் பேச வேண்டும்!
வாருங்க உள்ளே!
அவகாசமில்லை புரபஸர்!
உங்களை மீட்டுச் செல்ல, வந்திருக்கிறோம்!
நோ-நான்-அஹ்-நான் போக முடியாது!


புரபஸர்- உங்களுக்கு உதவ வந்தாள் இந்தப் பெண். இவளுக்கு இழைக்கப்-பட்டிருக்கும் கொடுமையைப் பாருங்-கள். இப்போது நீங்களானால் வர முடியாது என்கிறீர்கள்!
கொஞ்சம் பொறுங்கள்- நான் சாமான்களை அள்ளிக் கட்டிக் கொண்டு வந்து விடுகிறேன்!
பத்தே நிமிடம்- புறப்பட்டு விடுகிறேன்!
ஏதோ விசித்திரமாகப்படுகிறது ஜெனிவர். கம்மென்று இரு!
யாருக்கு சமிக்ஞை அனுப்பினீர்-கள் புரபஸர்? எதற்காக?



இரகசிய பட்டன் ஒன்றை அழுத்-
தினீர்களே- சொல்லுங்கள்!
க்ராஷ்!
ஜெனிவர்!
ப்பு-புரபஸர்!
அவரை
தடுத்து
நிறுத்து!
விலகிப்
போடி
அப்பால்!
விரியன்
பாம்பே-
உன்னை-


சபாஷ் ஜெனிவர்- உன்னைப் பற்றிய கவலை விட்டது. பழைய திறமைகள் எல்லாம் அப்படியே இருக்கின்றன!
இரகசிய போலீஸுக்கு தகவல் சொல்ல முற்பட்டதேன் புரபஸர்!
என்னுடைய குடும்பத்தினரை பிணையாகப் பிடித்து வைத்து இருக்கின்றனர்!
அவர்களை பலிகொடுக்க நான் விரும்பவில்லை!
நீங்கள் போய்விடுங்கள்- எந்த விநாடியிலும் போலீஸார் வந்து சேரலாம்!
எங்களோடு வரப் போகிறீர்களா- இல்லையா?
ஆல்ரைட்-இஷ்டமில்லாத மனிதரை நான் ஏன் வற்புறுத்த வேண்டும்-
இரகசிய அழைப்பொலி அழுத்தப்பட்டதை தொடர்ந்து போலீஸார் விரைந்து வந்தனர்.


நீ இங்கேயே இரு ஜெனிவர்- உன்னையும் புரபஸரையும் அடித்துப்போட்டு விட்டு இப்போது தான் நான் ஓடுவ தாக போலீஸிடம் சொல்!
ஓ.கே!
தலைதெறிக்க ஓடிவருகிறவர் களுக்கு இதை கவனிக்க நேரமிருக்காது-
அமெரிக்கன்- எங்களை அடித்தான் இப்போது தான்-
அவனை பிடித்து விடலாம்!


காரிகன் தப்பியோடுகிறான்! விரட்டிப் பிடிக்க வேண்டும்·
அவசரத்தில் காலடியில் நீண்டிருந்த கம்பியைக் கவனிக்கவில்லை.
உன் துப்பாக்கியும் பணமும்·
எங்களுக்குத் தேவைப்படுகிறது!
புரபஸருக்கு வர இஷ்டமில்லை. நாம் ஊர் திரும்புவோம் ஜெனிவர்!
ஊருக்கா? ஆகா· ஜாலி!
இந்த போலீஸ் காரை கிளப்பிக் கொண்டு போய் விடலாம்!
அதே சமயம் கிழவன் க்ரோன்ஸ்கியின் காரை ராஸ்கோவ் கண்டுபிடித்திருந்·தான்.
நிறுத்து யூரி- கிடங்கை சோதனை போட்டுப் பார்ப்போம்!


க்ரோன்ஸ்கி!
துரோகி-காரிகன் தப்பிக்க உதவிய உன்னை-
கர்னல்- அப்படியில்லை'
இவரை பார்த்து விட்டு பிறகு சொல்லுங்கள்.
படுமோசமான காயம்!
உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு போக வேண்டும்!
இந்தக் கிழவன் எக்கேடாவது கெட்டு ஒழியட்டும். காரிகனைப் பிடிக்க வேண்டும்!
கர்னல் ஸார்- இவரை வரவழைத்ததே நீங்கள்தான். மரணமடைய நீங்கள் காரணமாக இருந்தால்-
ஆல்ரைட்- நீ சொல்வதும் சரிதான்! தூக்கிப் போடு- கிளம்பு!
காரிகனின் வாகனமும், ராஸ்கோவின் வாகனமும் எதிரெதிர் திசையில் விரைந்தன.


ஹுய்ய்- ராஸ்கோவ் அதில் இருக்கிறான். இனி நம்மைப் பிடிக்க அவனால் ஆகாது!
இதோ!
உள்ளே வரைபடம் ஏதேனும் இருக்கிறதா பார்ப்போம்!
குட்- வடமேற்கு எல்லையைத் தொட குறுகலான சாலை ஒன்றை தேர்ந்து எடுத்துச் சொல்!
பெட்ரோல் தீர்ந்து போகும் நிலையில் இருக்கிறது!
ஐயோ- அந்த சண்டாளனிடம் மாட்டிக் கொண்டு விடுவோமா?
இல்லை- வேறு வாகன வசதி தேடிக் கொண்டு விடலாம்!
எனக்கு களைப்பாக இருக்கிறது. ஓய்வு தேவை!
அதோ நீ ஓய்வெடுக்க வசதியான இடமும் நம் நாளைய வாகனமும்!



நன்ருக தூங்கி ஓய்வெடுத்-
துக் கொள் ஜெனிவர்!
அங்கே மருத்துவமனையில்-
இவரை இனி டாக்டர்கள் கவனித்துக் கொள்வார்கள். வா— நாம் காரிகனை தேடிச் செல்வோம்!
யெஸ் ஸார்!
இவர் இங்கே இருப்பதாக பாஸ்கோ-கோவின்யான்- தூதரகத்திற்கு தகவல் கொடுத்து விடுங்கள்!
பின்னர்-
இந்தாப்பா- என் உடைகளை வெளுக்க எடுத்துச் செல்லப் போகிருயா? அந்த சட்டை மட்டும் இருக்கட்டும்!
இந்த சட்டையை அமெரிக்க தூதரகத்திடம் ஒப்படைத்து விடு!
பின்னர் அமெரிக்கத் தூதரகத்தில்-
ஊய்ய்- நாற்றம் சகிக்கவில்லை- இதை ஏன் இங்கே அனுப்பி வைத்தார்களோ?


சே- என்ன அது? நாற்றம் சகிக்கலே!
பாஸ்கோ-கோவின்யான் தூதரகத்திலிருந்து யாரோ ஒரு கோமாளி இதைக் கொண்டு வந்து ஒப்படைத்து விட்டுப் போகிறான்!
தூக்கி எறிய வேண்- பொறு- கை மடிப்பில் ஏதோ சங்கேதமாக எழுதப்பட்டிருக்கிறது!
மொழி பெயர்க்க ஏற்பாடு செய்!
உளவுத்துறையில் எவருமே காரிகனின் சங்கேதக் குறிப்பை புரிந்து கொள்ள முடியவில்லை. தொடர்ந்து-
நினா-காரிகன் என்று கையெழுத்திட்டு ஒரு சங்கேதக் குறிப்பு வந்திருக்கிறது. உன்னிடம் ஏதாவது சொல்லிச் சென்றிருக்கிறானா?
அப்படியா?
யூரி- எதற்கும் காரிகன் பற்றி ஒரு பொது அபாய எச்சரிக்கையை எழுப்பு!
விஷயம் மேலிடத்திற்கு எட்டிவிடுமே!
சொன்னதைச் செய்-போ! அவனை எப்படியும் மடக்கியாக வேண்டும்!
எல்லா வாகனங்களையும் நிறுத்தி சோதனை போடுமாறு சொல்!
அந்த ஜோடி தப்பி விடக் கூடாது!


ஜெனிவருக்கு ஓய்வு அவசியம் தான்- ஆனால் ஜனங்கள் எழுந்து கொள்ளுமுன் நாங்கள் இடத்தை காலி செய்தாக வேண்டும்-
பின்னர்-
சரி-புறப்படுவோமா? எதற்கும் இது உன் கை-வசம் இருக்கட்டும்!
சாலையில்-
அந்தக் கோச்சு வண்டியையும் சோதனை போடணுமா?
கிண்டலா? அவர்களுக்கென்ன பைத்தியமா- இதில் பயணம் செய்ய?
பில்- நானும் உங்களருகே வரட்டுமா?
நோ- அங்கே மறைவாக இரு. போலீஸ் நடமாட்டம் ஏராளம். கோச்சு வண்டியை நாம் கடத்தி வந்திருக்கும் விஷயம் விரைவிலேயே இவர்களை எட்டக் கூடும்!
பொது அபாய எச்சரிக்கை விடுத்த பின்னரும் அந்த குள்ள நரிப் பயல் போன போக்கு தெரியவில்லையே? தூ- வெட்கக்கேடு!
உங்களுடைய ஈ.எஸ்.பியை உபயோகப்படுத்த சரியான தருணம் இது காம்ரேட்!
என்னையே கிண்டல் பண்ணுகிற அளவுக்கு திமிர் வந்துவிட்டதா ராஸ்கல்!


அமெரிக்காவில்-
இதோ நொடியில் அங்கே வந்து சேருகிறேன்!
தப்பிவிட்டார்களாம்- வடமேற்கு எல்லையை நோக்கிச் செல்கிறார்-களாம். ஜெனிபருக்கு காயமாம். விரைவு வாகனத்தோடு காத்தி-ருக்கக் கோரியிருக்கிறார்!
ஆனால் எனக்கு அதிகாரமில்லையே! உடனடியாக ஜனாதிபதியை சந்திக்க வேண்டும்!
அவசியமில்லை!
அங்கே- காட்டிலே
இதில் நாம் பயணம் செய்வது இப்-போது எதிரிகளுக்குத் தெரிந்து விட்-டிருக்கலாம். இதை எங்கேயாவது நிறுத்தி விட்டு- மேலே? ஓ!
கீழே வருகிறார்கள்- ஆபத்து!
நான் தேறி விட்டேன். வரட்டும்- மோதிப் பார்த்து விடலாம்!
ஒரு சிலர்தான் என்று நினைக்கிறேன்!
எனக்கு நீங்கள் செய்திருக்கும் உதவிக்கு நான் என்ன கைமாறு-
உஷ்ஷ்- போதும் நிறுத்து! நன்றி சொல்ல நல்ல நேரம் பார்த்தாய்!
இறங்கி வா- சீக்கிரம்!


நீ அந்தப் பக்கமாகப் போ! நாங்கள் எதிர் திசையில் போகிறோம்!
வருகிற ஓசை கேட்கிறது!
நாம் தப்பியோடப் போவதில்லை. அந்த ஹெலிகாப்டரைக் கைப்பற்ற முயற்சிக்க வேண்டும்!
ஓ- சூப்பர் ஐடியா!
எதிரிகள் புதர்களிடையே தேடி வந்து கொண்டிருந்தார்கள்.
அதோ வண்டி- கால்நடையாகவே கிளம்பி விட்டார்கள் போலும். சுலபமாக மடக்கி விடலாம்!
ஆனால்·
காவலுக்கு ஒரு ஆள் நிற்கிறான்!
நம்மை உயிரோடு பிடிப்பது அவர்களுடைய நோக்கம். எனவே, தோட்டாவுக்கு பயப்படத் தேவையில்லை. நேரே போய் சரணடைவதாக நாடகமாடு!
சுடாதே என்னை!
?!
சரணடைகிறேன்!
அந்த ஆள் எங்கே?


இங்கே இருக்-கிறேன் தம்பி!
ஜெனிவர், ஏறு சீக்கிரம்!
எதிரிகள் தங்களைத் தேடியலைந்து கொண்டிருக்கையில் சுற்றி வந்து ஹெலிகாப்டரினுள் ஏறிக் கொண்-டார்கள் காரிகனும், ஜெனிவரும்.
இதை ஓட்டத் தெரியுமா பிலிப்?
இப்போது பாரேன்!
காற்றாடி சுழலத் தொடங்கியது.
விர்ர்ர்
ஏய்ய்- யாரது? வா-திரும்பி வந்துவிடு!
?
ரேடியோ வசதியைக்கூட அவர்கள் இழந்து விட்டார்கள்!
எச்சரிக்கை செய்தி அனுப்ப இயலாது!
ஏறத்தாழ நாம் தப்பி விட்ட மாதிரி தான்- இல்லையா?
என்றாலும் அவர்கள் நம்மை கண்டு பிடித்து விடும் அபாயம் உண்டு!
உச்ச வேகத்தில் செலுத்துங்கள்!


நம்மைக் கண்டுபிடித்துவிட்டார்களே-யானால் யுத்த விமானங்கள் நம்மைச் சூழ்ந்து கொள்ளக் கூடும்!
நம் ரேடியோ முன்கூட்டியே சொல்லி விடும். அத்தோடு நம் வசம் ராக்-கெட்டுகள் உண்டு. ஒரு கை பார்த்து விடலாம்!
'ஜெனிவர்- எல்லையோரத்தை நெருங்கி விட்டோம். கடக்க முயன்றால் நம்மை சுட்டு வீழ்த்த முயற்சிப்பார்கள்!
தரையிறங்க வசதியான இடம் தென்படுகிறதா பார்!
யூரி- அவர்கள் தப்பியோடிக் கொண்டு இருந்தால் நிச்சயம் இதற்குள் நம் கண்ணில்பட்டிருப்பார்கள். எனவே இங்கேதான் எங்கோ பதுங்கிக் கிடக்கக் கூடும்!
நீங்கள் சொன்னால் சரியாகத்-தானிருக்கும் ஸார்!
கிண்டலா? ஒருதடவை வாங்கிக் கட்டிக் கொண்டது போதாதா?
ஜாக்கிரதை!
பல மணி நேரம் கழித்து-
ஸார்- எல்லையோர காவல் மையத்திலிருந்து தகவல்- ஒரு ஹெலிகாப்டர் நெருங்கி வருகிறதாம்!
இதற்கும் காரிகனுக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்? அவ்வளவு தொலைவு போயிருக்க முடியாதே?
அந்த ஹெலிகாப்டர் கேள்விகளுக்கு மறுமொழி சொல்லாமல் மௌனம் சாதிக்கிறதாம்!
யுத்த விமானங்கள் அதை நோக்கி விரையட்டும்!


அவர்களை கொன்று விடச் சொல்!
இனியும் அவர்களை விட்டு வைக்கக் கூடாது!
அந்த ஆறு எல்லையின் குறுக்கே போகிறது பார்! நாம் படகில் பயணம் செய்தால் எளிதாக தப்பி விடலாம்!
படகுத் துறை ஹெலிகாப்டரை இறக்க போதுமான பரப்பளவில் இருக்கிறது!
ஜனங்கள் ஓடோடி வருகிறார்கள்!
மேலே இருந்து பார்த்த போது பார்வை-யில் படாத சில தடைகளின் மீது மோதி ஹெலிகாப்டர் பலத்த சேதத்திற்குள்ளாகியது.
க்ராஷ்!
ஜெனிவர்!
நான் நன்றாகத்தான் இருக்கிறேன்
ஓ.கே. வெளியேறி மேல் நோக்கி சுடு!
ஒரு படகை கட்டவிழ்த்து நான் அதில் ஏறிக் கொள்ள பாதுகாப்பு கொடு!


ஓசையின்றி எல்லையை கடந்து விடலாம்!
பில்!
ஆபத்து!
எதிரிகளின் விமானம் ஏன்று நெருங்கி வந்து கொண்டிருந்தது.
தொலைந்தோம்!
சட்டென்று படகை பக்கவாட்டில் செலுத்து. பாதையை நேர் செய்து கொள்ள அவனுக்கு அவகாசம் இல்லை!
பட்! பட்! பட்! பட்! பட்!
துறையை நோக்கித் திரும்புவோம்!


ஹெலிகாப்டரினுள்ளே ஏறு!
ஆனால் அது பறக்காதே காரிகன்?
பல மைல் சென்று விட்ட யுத்த விமானம் மறுபடியும் குறிவைக்க வேகமாக திரும்பி வந்தது.
சுடும் அமைப்பை இயக்கி வைத்திருக்-கிறேன். சுடு என்று நான் கத்தியதும் இந்த பட்டன்கள் அனைத்தையும் அழுத்து!
ஓ.கே.
நெருங்கி வருகிறான்!
கீழே படுத்தவாறு மூச்சை தம் பிடித்து சக்தி முழுவதையும் ஒன்று திரட்டி, ஹெலிகாப்டரை உந்தித் தள்ளினார் காரிகன்.
ஜெனிவர் சுடு!
டும்- டுமீல்!


ராக்கெட்டுகள் சீறிக் கொண்டு பாய்ந்தன-மிக்கை குறிவைத்து.
தாக்கப்பட்ட விமானம் தறிகெட்டு சுழன்று நீரினுள் விழுந்தது.
படீர்!
எஜெக்டரின் உதவியால் சட்டென்று வெளியே பாய்ந்த விமானி தப்பித்துக் கொண்டான்.
உள்ளூர் ஆசாமிகள் ஓடி வருவதற்குள் நாம் விலகிப் போய் விட வேண்டும். ஏறு!
நதியில் போலீஸ் கண்காணிப்பு இருக்குமே?
வாஸ்தவம்தான்- அந்த திருப் பத்தில் இறங்கிக் கொள்வோம்!
படகில் நாம் இருப்பதாக 'மிக்' ஏற்கனவே செய்தியனுப்பியிருக் கக் கூடுமல்லவா-
இனி கார் ஏதாவது அகப்படுமா என்று தேட வேண்டும்!
காரிகன் குறிப்பிட்டிருந்த இடத்தை வந்தடைந்தனர் ப்ராஸ்ட்டும், நினாவும்.
ஏகப்பட்ட வரைமுறைகளைப் புறக்கணித்து விட்டு இங்கே கொண்டு வந்து உங்களை சேர்த்திருக்கிறேன். எங்கள் அரசுக்கு இடைஞ்சல் வருகிற மாதிரியான காரியம் எதுவும் செய்து வைக்காதீர்கள் மேடம்!
கவலைப்படாதீர்கள்!



எல்லேக்கு அப்பால் யாரோ ஏகப் பட்ட ரகளே பண்ணி விட்டு தலைமறைவாகிவிட்டார்களாம்!
காரிகன் எப்படி தப்பிவருவான் என்று என்னல் புரிந்து கொள்ளவே முடியவில்லே!
சமிக்ஞை பற்றி எதுவுமே சொல்லப்-படவில்லே. அவர்கள் வந்துகொண்-டிருப்பதை எப்படி நாம் தெரிந்து கொள்வது நினு?
அங்கே-
பொறு-நேரே கர்னலிடம் சொல்!
செயலிழந்துபோன போலீஸ் கார், உடைந்த பண்ணே கோச்சு வண்டி, விழுந்து நொறுங்கிய ஹெலிகாப்-டர், படகுகள், ஒ-ஒரு மிக் விமானம்!
அப்புறம்!
வழி முழுக்க நாசத்தை விளேவித்துச் சென்ற அந்த ஜோடி இப்போது எல்லேயோரம் ஆற்றில் ஒரு படகில் சென்று கொண்டிருக்கிறது ஸார்!
ஜெட் விமானத்தில் நாமே நேரில் போய் இந்த சேஷ்டைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைப்போம்!
யூரி- கிளம்பு!


காம்ரேட்- போலீஸ் ஸ்டேஷன் எங்கே இருக்கிறது?
மூன்று கட்டிடம் தள்ளி, இடது பக்கமாக ஸார்!
போலீஸ் காரை திருடப் போகிறோமா என்ன?
அதுதான் பத்திரமானது- ஜெனிவர்!
ராஸ்கோ கொடுத்த பாஸ் இதோ! நான்-க்ரோன்ஸ்கி நீ-என்னை நாடு கடத்துகிறாய்!
இது பலிக்குமா?
ஆபத்தான தந்திரம் தான்- ஆனால் வேறு வழியில்லை!
எங்கே பில்?
இந்த ரோடு இகோர் செக் பாய்ண்ட் நோக்கிப் போவதாக போலீஸ் மேப்பில் இருக்கிறது- வண்டியை நேராக விடு!
எல்லா செக் பாயிண்ட்களையும் மூடச் சொல்லி, ரேடியோவில் தகவல் சொல்லலாமே கர்னல்?
நல்ல யோசனை!
கொலை வெறியில் துடித்துக் கொண்டு இருந்த ராஸ்கோ ஜெட்டில் விரைந்து கொண்டிருந்தான் காரிகனை நோக்கி!


நீங்கள் கோரியபடி கார் இதோ ரெடி கர்னல்!
செக் பாயிண்ட்டை மூடிவிட்டீர்கள் அல்லவா- அங்கே அழைத்துப் போ எங்களை!
அதோ!
அவர்களுடைய படகு!
ஆனால்- காலி!
வந்துவிட்டோம்! இங்கேதான் உன் சாமர்த்தியத்தை நீ காட்டவேண்டும்!
ஜமாய்த்து விடுகிறேன்! எதற்கும் தயாராக இருங்கள். இந்த கடைசி தருணத்தில் அகப்பட்டுக்கொண்டு விடலாகாது!
நான் ரெடி. ஜெனிவர்!
நிறுத்து- தாண்டிச் செல்ல அனுமதியில்லை!
எல்லை மூடப்பட்டிருந்தது- ராஸ்கோவின் உத்தரவுப்படி!
யாரும் வெளியேற முடியாது- கர்னலின் உத்தரவு!
இந்த ஆளை நாடு கடத்த உத்தரவு இந்த பாஸில் கையெழுத்திட்டிருப்பது யார் என்று பாருங்கள்!


கர்னல் ராஸ்கோவ்!
உத்தரவை மறுத்தது யாரென்று கேட்டால் உங்களைத்தான் காட்டுவேன்- கர்னலிடம்!
ஐயோ வேண்டாம்- இப்போ என்ன செய்வது?
போய்த் தொலையட்டும்- விட்டு விடுவோம்!
காவலாளியின் பூத்தில் டெலிபோன் கிணுகிணுத்தது.
கேட்டை திறந்து இவர்களை அனுப்பு. நான் போய் போனை எடுக்கிறேன்!
!
இப்படி ஓடினால் தொப்பை வலிக்காதோ- மெள்ளவே போங்கள்!
ஏய் வாயாடி- வாயை மூடிக் கொண்டு போக மாட்டாய்!
கர்னல்- என்ன சொல்கிறீர்கள்?
ஏய்ய்- அந்தக் காரை நிறுத்து- விடாதே!
சுட்டுத் தள்ளு!
ஊஹூம்- இடைவெளி அதிகம்!


அவர்கள் எல்லையைத் தாண்டி விட்டார்கள். விரட்டிக் கொண்டு போ- விடாதே!
நோ!
உன் மேலதிகாரியின் உத்தரவை மறுத்துப் பேச என்ன தைரியம் உனக்கு?
கர்னல்- அந்த நாடு நம்மோடு நேசபாவத்தோடு இல்லை- வம்பு வந்து சேரக் கூடும்!
தெரியும் எனக்கு!
விளைவுக்கு நீங்கள்தான் முழுப் பொறுப்பேற்க வேண்டி வரும்!
காரை நேரே விடப் போகிருயா இல்லையா?
கர்னல் கொஞ்சம் சிந்தியுங்கள். அவர்களை நீங்கள் பிடிக்கலாம். கொல்லலாம். ஆனல் அந்த நாடு வன்மையாகக் கண்டனக் குரல் எழுப்பத் தவருது. நம் தலைவர்கள் உங்களை கடுமையாகத் தண்டிப்பார்கள்!
காரிகன் தப்பிச் செல்வதை என்னல் சகித்துக் கொள்ள முடியாது!
வீண் பிடிவாதம் அழிவுக்குத் தான் வழி வகுக்கும்!
வெற்றி தவறுகளை மறைத்து விடும்!


முன்னல்-
பெட்ரோல் தீர்ந்து போய் விடும் போலிருக்கிறது. நினைவுக்கு சமிக்ஞை அனுப்ப முடியுமா என்று பார்ப்போம்!
நினை சமிக்ஞையை தெரிந்துகொள்ள இப்பகுதியில் இருப்பாள் என்று என்ன நிச்சயம்?
ஒரு நம்பிக்கைதான்!
காரிகனின் எதிர்பார்ப்பு பொய்யாகவில்லை.
அதோ- வாருங்கள் போய் பார்ப்போம்!
பார் அங்கே- விபத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். பிடித்துவிட்டோம் அவர்களை- ஒரு வழியாக!
ஓட்டம் பிடித்தனர் காரிகனும், ஜெனிவரும்.
இந்த ஓட்டப் பந்தயத்தில் வெற்றி பெற்றால் நமக்குக் கிடைக்கும் பரிசு- நம் உயிர்!
சாலைத் தடை! இறங்கு- நடந்தே போவோம்!


மிஸ் நினா- கீழே சாலையில் நடமாட்டம் தென்படுகிறது!
காரிகனும், அந்தப் பெண்ணுமா?
அவர்களேதான்- உடனடியாக மீட்க வேண்டும் அவர்களை!
மீட்க வேண்டுமா?
ப்ராஸ்ட்- என்ன காரியம் இது?
அப்பொழுது சிறிதும் எதிர்பாரா நிகழ்ச்சி ஒன்று அரங்கேறியது.
என் சகோதரன் தோற்று விட்டார். ஆனால் நான்-
நோ ப்ராஸ்ட்- வேண்டாம்!
இந்த அடாத காரியத்தைச் செய்ய உன்னை நான் ஆவ-
முட்டாள் பெண்ணே!
உன் நண்பர்களை முதலில் ஒழித்துக் கட்டி விட்டு பிறகு உன்னைக் கவனிக்கிறேன்!


ஹெலிகாப்டரிலிருந்து யாரோ காரிகனை சுடுகிறார்கள்!
ஹாய்ய்- அது என் தம்பி கிர்டி! காரிகனும் அந்தப் பெண்ணும் தொலைந்தார்கள்!
சுடுகிறார்கள்- பதுங்கு!
சண்டாளி-குறி தவறச் செய்து விட்டாயே!
ஆல்ரைட்!
முதலில் உன்னை தொலைத்துக் கட்டுகிறேன்!
பிறகு அவர்களை!
பில்- அவன் நினைவைக் கொல்லப் பார்க்கிறான்!
டுமீல்
விடமாட்டேன்!


கிர்டி
கிர்..ர்...டி
ஏறுங்கள் சீக்கிரம்! எந்த விநாடியிலும் எதிரிகள் வந்து சேரலாம்!
அமெரிக்காவில் தூதரக அதிகாரியாகப் பணியாற்றிய தந்தையின் இரு மகன்கள் ராஸ்கோவும், கிர்டியும், படித்து முடித்து விட்டு ராஸ்கோ மட்டும் தாயகம் திரும்ப, கிர்டி 'ப்ராஸ்ட்' என்ற மாற்றுப் பெயருடன் அமெரிக்காவிலேயே தங்கி விட்டான். பின்னர் அமெரிக்க உளவுப் படையினுள் ஊடுருவி தன சகோதரனின் இரத்த வெறிக்குக் காரிகளைப் பலியாக்க நிச்சயமாகத் திட்டம் தீட்டி அனுப்பினான். ஆனால் அவன் முடிவோ பரிதாபமாகி விட்டது.
கர்னல் ராஸ்கோ புலம்பினான்.
கிர்டி- என்னருமை சகோதரனே!
பாவம்- என்ன இருந்தாலும் அவனும் மனிதன்தானே!
அந்தக் கண்ணீரிலும் சுயநலம் கலந்திருக்கும் என்பது புரியவில்லையா உனக்கு?
அப்படியும் மனிதர்கள் உண்டா என்ன?


ஜெனிவர்-நீ பத்திரமாக வந்து சேர்ந்தது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது தெரியுமா-காரிகனேயும் எதிர்பார்த்தோம்-யாரோ ஒரு மலை ஜாதி மனிதனேடு வந்து சேர்ந்திருக்கிறுய்!
வேண்டாமே கேலிப் பேச்சு!
இந்த தாடியை பார்த்துப் பயந்தே ஜனங்கள் வழிவிட்டு விலகி ஓடியிருப்பார்கள்!
பில்- நீங்கள் மட்டும் சமயத்தில் கிர்டியை வீழ்த்தத் தவறியிருந்தால் நான் இந்நேரம் செத்துப் போய் இருப்பேன்!
அதைச் செய்ய நான் எப்படி தவறியிருப்பேன்?
பின்னர்-
விரைவிலேயே பூரண குணமடைந்து விடுவேன் என்று சொல்கிறுர்கள்!
உனக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு கண்டனம் தெரிவிக்கப் போகிறது அரசு-
ராஸ்கோவை தொலைத்துக் கட்டாவிட்டால் பழிவாங்க மறுபடியும் முயற்சிப்பான் சீஃப்!
வேண்டாம் - பாவம் ராஸ்கோவுக்கு கிடைத்த தண்டனை போதும்!
ஆனுல் காகிதத்தில் எழுதப்படும் கண்டனங்களுக்கு அவர்களுடைய அரசு அசைந்து கொடுக்காதே!
அவனுடைய தம்பியின் மரணத்தை சொல்கிறுயா?



அதற்கு வேறு ஒரு ஐடியா வைத்துள்-ளேன். நமது உளவுத் துறையில் நடை பெறும் சம்பாஷணைகளை ஒட்டுக் கேட்-பதற்கு எதிரிகள் இங்கு ஏதாவது 'மைக்' பொருத்தியிருக்கிறார்களா?
ஆமாம்! ஒரு மைக்ரோ போன் உள்ளது! அதற்கு என்ன இப்போது?
வாருங்கள் என்னோடு!
சொல்கிறேன்!
அதோ அங்கே இருக்கிறது ஒட்டுக் கேட்கும் கருவி!
அதாவது ராஸ்கோவும், அவனுடைய சகோதரனும் விவகாரம் மொத்தத்-தையும் மேலதிகாரிக்கு தெரிவிக்கா-மல் தாங்களாகவே நடத்தியிருக்-கிறார்கள்!
எதிரிகளுக்கு கேட்க வேண்டுமென்ற நோக்கத்துடனே உரக்கப் பேசினார் காரிகன்.
என் மீது இருந்த தனிப்பட்ட கோபத்தை தீர்த்துக் கொள்வதற்காக ராஸ்கோவ் தன் அதிகார பலத்தை துஷ்பிரயோகப் படுத்தியிருக்கிறார் சார்!
ஐயோ- யாருடைய தலைஎல்லாம் உருளப் போகிறதோ?
காரிகன் எதிர்பார்த்தபடியே நடந்தது.
செய்தி காட்டுத் தீ போல் பரவியது.
ராஸ்கோ- அவருடைய சகோதரன்- தலைவர்களிடம் விஷயத்தைத் தெரிவிக்கவேயில்லை!
கேட்டாயா- எனக்கு எதுவுமே தெரியாது!
எனக்கும் தான்!
எனக்கும் தான்!


கர்னல் யூரி, தலைவர்கள் குழு உன் முன்னாள் மேலதிகாரியை விசாரணை செய்ய விரும்புகிறது!
ஏற்பாடு செய்-கிறேன் சார்!
ராஸ்கோவை காட்டிக் கொடுக்க காரிகன் செய்த தந்திரம் பலித்து விட்டது!
யூரி-ராஸ்கோவின் இடத்தை இட்டு நிரப்ப உன்னால் முடியுமில்லையா?
முடியும் சார்-நன்றி!
கர்னல் ராஸ்கோவைக் கைது செய்ய இரகசியப் போலீஸார் விரைந்தனர்.
அவர்களைக் கண்ட மறுநொடியே ராஸ்கோவுக்கு தன் முடிவு நெருங்கி விட்டது என்பது புரிந்து விட்டது.
ராஸ்கோவா? ஐந்தாவது மாடி-505 சார்!
505




பிரகாஷ் பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் சார்பாக ' லயன்'' காமிக்ஸை வெளியிடுபவரும், ஆசிரியரும்: S. விஜயன். முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த.பெ.எண்: 374, சிவகாசி. வெளியீடு எண்: 73
அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி-626 123.

விரைவில் வருகிறது !




அடுத்த வெளியீடு!
மரணத்தின் நிறம் பச்சை!
லயன் காமிக்ஸ்
ரூ 3/-
புத்தம் புதிய சித்திரக் கதை!

ரூ.5000 பரிசு!



ரூ.5000 பரிசு!

Regd. No: TN/VR/29 R. N. 49613/87